# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE

## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES P.W.1

## OS.NO.147/2023

**Name** : திரு.சண்முகம்
**Father/Husband Name** : திரு.பழனிவேல் செட்டியார்

**Age** : 53

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.07.2026**

**இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**விசாரணை தொடங்கிய நேரம் :** 03.42 P.M

**குறுக்கு விசாரணை**

1. இந்த தாவா சொத்திற்கான பத்திரம் பிரதிவாதியான என்னுடைய அண்ணனிடம் உள்ளது. இந்த சொத்து ஆதியில் என் தாத்தா சின்னப்பசெட்டியார் விலைக்கு வாங்கினார். என் தாத்தாவிற்கு என் அப்பாவும், குப்பம்மாள் மற்றும் சரஸ்வதியம்மாள் என்ற என் அத்தைகள் தான் வாரிசுகள். தற்போது மேற்படி குப்பம்மாள் மற்றும் சரஸ்வதியம்மாள் இருவரும் இறந்துவிட்டார்கள். என் அப்பாவிற்கு நானும் பிரதிவாதி மட்டும் ஆண் வாரிசுகள். இந்த சொத்து குறித்து என் தந்தை உயில் எழுதி வைக்கவில்லை. என் தாத்தா உயில் எழுதி வைக்கவில்லை. செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்கவில்லை. என் அப்பாவின் இறப்பு சான்று தாக்கல்செய்துள்ளேன். என் இளைய சகோதரி குணசுந்தரி இறந்துவிட்டார். அவர் திருமணம் ஆவதற்கு முன்பே இறந்துவிட்டார். தங்களுடைய தந்தை குப்பம்மாள் என்ற சகோதரியின்

மகளான ராதா என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்றால், சரிதான்.

2. என் அப்பாவின் வாரிசு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தாத்தாவின் வாரிசுகளை நீதிமன்றத்தில் சேர்க்கவில்லை என்றால், சரிதான். என் தாத்தாவின் வாரிசு சான்றும் ஒப்படைக்கவில்லை. சேர்க்கவேண்டிய வாரிசுகளை வழக்கில்சேர்க்காமல் உள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

3. என் அப்பா இறந்த பிறகு தான் எனக்கு திருமணம் ஆனது. தங்கள் திருமண செலவுகளை தங்களுடைய அண்ணன் தான் செய்தார் என்றால், என் அம்மா தான் செய்தார். பிரதிவாதி தான் திருமண செலவுகள் செய்தார் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர் என்றாலும், சரியல்ல. குறிப்புகளில் சொன்னவாறு பேச்சுவார்த்தை நடந்ததா என்றால், நடந்தது. அந்த சமரச பேச்சின் முடிவாக வேறொரு உடன்படிக்கை பத்திரம் செய்தோம். அதன் படி நடந்து கொண்டீரா என்றால், அதன் படி நடந்து கொள்ளவில்லை. அந்த சமாதானம் எங்களுக்குள் ஒத்துப்போகவில்லை. என்னை படிக்க வைத்ததும், தங்களுக்கு திருமணம் செய்து வைத்ததும் பிரதிவாதியான உங்கள் சகோதரர் தான் என்றால், சரியல்ல.

4. பிரதிவாதி செய்த செலவுகளையும் கொடுக்க வேண்டிய தொகைகளையும் தாங்கள் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டும் என்றாலும், அதை தாங்கள் கொடுக்காததால் தான் பேச்சுவார்த்தை நடைமுறை படுத்தவில்லை என்றால், சரிதான். அந்த உடன்படிக்கையில் எழுதிய தொகை கொடுக்க வேண்டும். தங்களுக்கும் தங்கள்சகோதரருக்கும் இடையில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் தான் தங்களிடம் காண்பிக்கப்படுவது என்றால், சரிதான். அந்த பத்திரம் 13.08.2008 ல் ஏற்பட்டது என்றால், சரிதான். அந்த பத்திரம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 படிக்கு தாங்கள் கொடுக்க வேண்டிய தொகை கொடுக்காததால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான்.

5. சொத்து தங்கள் தாத்தா சொத்து என்பதால் அவருடைய வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்றாலும், அவரை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் மேற்படி குப்பம்மாளின் வாரிசான ராதாம்மாவிற்கும் சொத்து பாத்தியமுள்ளது என்றால், சரிதான். ஆனால் ராதாம்மாள் இறந்துவிட்டதால் நானும் பிரதிவாதியும் தான் வாரிசுகள் ஆவோம். அதனால் இந்த தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிந்த நேரம் : 04.01 P.M

சாட்சி இன்று 07.07.2026 ல் திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.